★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 19உ செவ்வாய் (4—12—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 20உ புதன் (5—12—56) [இதழ் 151

## உயர்பதவிகள் மலாயர்களுக்கே!

சிங்கப்பூர் சர்க்கார் அறிவிப்பு

சிங்கப்பூர், டிச 2—

சர்க்காரில் உள்ள உயர்ந்த உத்தியோக இடங்கள் ஆறக்கு, பிரிட்டிஷாருக்குப் பதிலாக மலாயர்கள் உடனடியாக நியமிக்கப்படு வர் என்று சிங்கப்பூர் சர்க்கார் அறிவித்துள்ளது.

சிங்கப்பூர் 'சிவில்' உத்தியோகங்களில், மிகப் பெரும்பான்மை யானவற்றில் வெள்ளையரே இருக்கின்றனர்.

'இந்த நிலையை படிப்படியாக மாற்றுவதே சர்க்காரின் நோக்க

(4-ம் பக்கம் பார்க்க)

# பாலாறு ஓடும் என்றவர்கள் ஆட்சியில் இரத்த ஆறு ஓடுவது ஏன்?

## அரியலூர் விபத்து — சர்க்காரின் அலட்சியப் போக்கால் வந்த ஆபத்து

## திராவிடரின் உழைப்பும் இரத்தமும் வடவருக்குக் கிடைக்கும் வெள்ளிப் பணங்கள்

### இழிநிலை மாற்றவே தேர்தலில் ஈடுபடுகிறோம்

### தோழர் மு. கருணாநிதி முழக்கம்

"நாம் எத்தகைய ஆட்சியின்கீழ் இன்று இருந்து வருகிறோம்? 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதியன்று நடு இரவில், 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே-ஆனந்த சுதந்திரம்அடைந்துவிட்டோ' மென்று ஆடினார்கள்; அப்படி வாங்கின அந்த 'ஆனந்த சுதந்திர' நாட்டில், நாம் கடந்த 9 ஆண்டுகளாக அனுபவித்துள்ள 'சுதந்திரம்' எப்படிப்பட்டது ?

"சுதந்திரம் பெறுவதற்கு முன்னால், 'சுதந்திரம் வந்துவிட்டால் தேனாறு ஓடும்—பாலாறு ஓடும்,' என்றெல்லாம் காங்கிரசார் கூறினர்; 'அந்த ஆறுகளிலே சுதந்திரக் கப்பல்களை ஓட்டுவோம்,' என்று கூறினர்; இப்போது, தேனாறும் ஓடவேண்டாம்—பாலாறும் ஓடவேண்டாம்; இரத்த ஆறாவது ஓடாமலிருக்கிறதா? அந்த ஆற்றிலே மிதந்து செல்லுபவை பிணங்களாகவாவது இல்லாமலிருக்க வேண்டாமா? கண்டகண்ட இடங்களிலெல்லாம் ஆயிரக்கணக்கான மக்களை சுட்டுத்தள்ளி இருக்கிறார்களே இந்த சர்க்கார்!

"அண்மையில் பம்பாயின் முதலமைச்சராக மொரார்ஜி தேசாய் இருந்தார். அந்த அகிம்சா மூர்த்தியின் காலத்தில், ஜாலியன்வாலா பாக்கில் 1,600 ரவுண்டுகள் சுட்ட வெள்ளைக்காரக்கொடியவனையும் மிஞ்சும் வகையில் மக்கள் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள். அகிம்சையே உருவான மகாத்மாவின் அந்தராத்மாவுடன் பழகின இவர், 1,600 முறைகூட அல்ல—2,500 ரவுண்டுகள் மக்களைப்பார்த்துச் சுட்டிருக்கிறார். இத்தகைய அகிம்சா மூர்த்திகளின் ஆட்சியில்தான் 9-ஆண்டுகளாக நாம் கிடந்து உழன்றுவருகிறோம்."

*—இவ்வாறு, 1—12—56-ல் சென்னை—திருவொற்றியூர் தாங்கல் பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள திடலில், கே. வி. கே. சாமி நினைவுமன்றத் திறப்பு விழாவில் சொற்பொழிவாற்றுகையில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார்.*

### அசட்டுப் போக்கால் நேரிட்ட ஆபத்து?

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"அண்மையில் அரியலூரில் கோர இரயில் விபத்து நடைபெற்றது. அந்த விபத்தில் இறந்தவர்கள்—சர்க்கார் கணக்குப்படி—148 பேர். மற்றப் பொதுமக்கள் கூறும் கணக்கோ 200, 300-க்கு மேல் போகிறது. சின்னஞ்சிறு சிசுக்கள் உட்பட அவ்விபத்தில் இறந்த அந்தச் சம்பவம் நம்மையெல்லாம் நிலைகுலைக்கிறது.

"இந்த விபத்து, சர்க்கார் எச்சரிக்கையாக இல்லாதிருந்த நேரத்தில் நடைபெற்றாலும்கூட, 'இனி மேலாவது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்ற ஒரு நிலை ஏற்பட்ட பின் நடந்தது. ஏனென்றால், அண்மையிலேதான் ஐதராபாத்தில் மெகபூப் நகருக்கருகில் கோரமான விபத்து ஒன்று நடைபெற்றது. அந்த விபத்து நடந்த பிறகும்கூட 'எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தேவையில்லை' என்ற இறுமாப்பாலோ, 'இதெல்லாம் கடவுள் செயல்' என்ற அசட்டு நம்பிக்கையாலோ, 'காங்கிரஸ் ஆட்சியில் இப்படிப்பட்ட விபத்துக்கள் நடைபெறாது' என்ற எண்ணத்தாலோ அசட்டையாயிருந்ததினால்தான் இப்படி 300, 400 பேர்கள் என்று சாகவேண்டிய நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

### 'இந்நாட்டு மன்னர்'கள் இருந்திருப்பார்களே!'

"அந்த வண்டியில் சென்ற பெண்கள் பெட்டியை இன்னும் வெளியே எடுக்க முடியாமல், தீயிட்டுக் கொளுத்தினோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பெண்கள் ஏறிச் செல்லும் பெட்டியில் வெறும் பெண்கள் மட்டுமா சென்றிருப்பார்கள்? அவர்களுடன் எத்தனை கைக்குழந்தைகளும் பச்சை சிசுக்களும் இருந்திருப்பார்கள்? இந்த சர்க்கார் கூறுகிறபடி வருங்கால இந்நாட்டு மன்னர்களல்லவா இருந்திருப்பார்கள்? இவ்வளவு பேரையும் கொன்றுவிட்டு, குடும்பம் குடும்பமாகப் பலரைக் கொலை செய்துவிட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## வடநாட்டு ஆலை முதலாளிகளுக்கு யோகம்!

*பம்பாய், டிச. 3—*

வடஇந்திய ஆலை முதலாளிகள் பர்மாவில் 40,000 கதிர்கள் கொண்ட இரண்டு துணி ஆலைகள் திறவுவதை பர்மா சர்க்கார் வரவேற்கிறதாம்.

## அன்னியர் பண உதவியால் சில இயக்கங்கள் நடைபெறுகிறதாம்!

### குறிப்பிட்டுக் கூறாமல் வீண் புரளி கிளப்புகிறார் பண்டிதர்

*புதுடில்லி, டிச. 3—*

"இந்தியாவில் உள்ள பல நிறுவனங்கள், இயக்கங்கள், நேரடியாகவோ மறைமுகமாகவோ, அன்னிய நாட்டு உதவியைப் பெறுகின்றன"

என்று, மாநிலங்கள் சபையில் பண்டித நேரு கூறினாராம்.

" 'மதத் தலைவர்கள்' என்ற புத்தகம் சம்பந்தமாக எழுந்த கிளர்ச்சிகள், அன்னியர் பண உதவியுடன் இங்கு நடத்தப்பட்ட ஒரு பெரும் சதியை அடிப்படையாகக் கொண்டவை என்பது உண்மையா?" என்று கேட்கப்பட்ட போதுதான், 'ஒரு நிறுவனம் மட்டுமல்ல; பல இயக்கங்கள் அது போன்று அன்னிய உதவியுடன் இயங்குவதாக நாங்கள் சந்தேகப்படுகிறோம்,' என்று பண்டித நேரு கூறினாராம்.

## நேரு கண்ட அதிசயம்?

"காஷ்மீரைவிட மிகவும் முக்கியமான விஷயம், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து மக்கள் வெளியேறி இந்தியாவுக்கு வந்துகொண்டிருப்பதாகும்; நம்முடைய கடமையைக் குறித்துப் பேசும் வெளிநாட்டு ஏடுகள் இதற்குப் பதில் கூறட்டும்; ஏன் இந்த அதிசயமான நிகழ்ச்சி என்று விளக்கட்டும். ஒருவர் இருவர் அல்ல—35 இலட்சம் மக்கள் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ளனர்," என்று பண்டித நேரு, மாநிலங்கள் சபையில் பேசுகையில் கூறியுள்ளார்.

## 'கோவில்கள் கால்நடைப் பண்ணைகள் நடத்தவேண்டும்'

### மந்திரி பக்தவத்சலம் யோசனை!

*சென்னை, டிச 23—*

கோவில்கள் கால்நடைப் பண்ணைகளை நடத்தவேண்டும்!

அந்தக் கால்நடைகள் மூலம் கிடைக்கும் பால், வட்டாரத்தில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும்!

இந்த யோசனை புதிதல்ல—ஆச்சரியத்திற்குரியதுமல்ல; ஆனால், யோசனையைக் கூறியவர் ஒரு மந்திரி என்பதுதான் ஆச்சரியத்திற்குரியது! அந்த மந்திரி பக்தவத்சலனார் என்னும்போது, அது, அதைவிட ஆச்சரியத்திற்குரியதாகிறது!

ஸ்ரீபெரும்புதூரில் கால்நடை அதிகாரிகள் சங்கமாநாட்டில்பேசும் போது அவர், 'இந்த நாட்டில் கால்நடைச் செல்வம் அலட்சியமாகக் கருதப்படுகிறது,' என்று வருத்தத்தோடு கூறிவிட்டு, மேற்கண்ட யோசனையையும் கூறினாராம்!

**************************************

# டிசம்பர் 9!

சுவைமிகு காட்சிகள்! தித்திக்கும் கலைவிருந்து!

## முப்பெரும் கலைஞர்களின் கூட்டணி!

அனைவரும் காண வேண்டிய அற்புத நிகழ்ச்சி!

★

தூய பணிக்காக! தேர்தல் நிதிக்காக!

## அண்ணா

அவர்கள் தலைமையில்

★ கே. ஆர். இராமசாமி
★ எம். ஜி. இராமச்சந்திரன் ⟷ நாடக மன்றங்கள் அளிக்கும் நாடக விருந்து காண வாரீர்!
★ எஸ். எஸ். இராசேந்திரன்

டிசம்பர் 9 — எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

கட்டணம்: ரூ. 10, 5, 3, 1; பெண்கள் ரூ. 1.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

**************************************

# நம் நாடு

தி.மு.கழக இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4-12-'56 செவ்வாய்


## நிதி அமைச்சர் 'அரசியல் அல்வா'!

ஊமைக்கு உளறுவாயன் மேல் என்பார்கள். அவ்வாறு கூறப்படுவதினுல், சராசரி பேசத் தெரிந்தவர்கள் அனைவரிலும் உளறுவாயன் மேலானவன் எனக் கருதக்கூடியவர் எவரும் இருக்க முடியாது. அப்படி கருதிக் கொள்வதும் பெருந் தவறுடையது என்பதுடன் எள்ளி நகையாடத் தக்கதுமாகும்.

ஊமையுடன் ஒப்பவைத்துப் பார்க்கின்றபொழுதுஎதையோ கன்னுபின்னு எனக் கூவுகிற ஒருவன், மேலானவனுகத் தெரிந்த காரணத்தினுல், ஊமையிலும் உளறுவாயன் மேல் என்ற சொல் வழக்கிற்கு வந்துவிட்டது. அத்துடன் ஒரு ஊமையைவிட உளறுவாயன் சிறப்புக்குரியவனுகவும் கொள்ளப்பட்டான்.

இந்தத் தமிழ்ச் சொல் வழக்கைத் தங்களுக்குத் தாங்களே உணர்ந்து தெளிவுபெற விழைகிறவர்கள், சென்னை அமைச்சரவையை ஒருமுறை மேலொட்டாகப் பார்த்தாலே, அப்பழஞ் சொல்லின் உண்மையை நன்கு உணர்ந்துகொள்ளக்கூடும். இன்னும் ஆழ்ந்து நோக்கினுல், வேறு விரும்பத்தகாததும் வெறுத்து ஒதுக்கத்தக்கதுமான பல நச்சுத் தன்மைகளின் உள்ளடக்கமாக, சென்னை காங்கிரஸ் அமைச்சரவை இருப்பதையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளமுடியும். நிற்க,

காங்கிரஸ் அமைச்சரவையில் நடுநாயகமாக இருந்துவருகிறவர் முதலமைச்சர் கனம் காமராசர் அவர்களாவார். அவரோ, சட்டமன்றத்தில் பிற உறுப்பினர் முன்னிலையில் பேசுவதில்லை என நோன்பு பூண்டிருப்பவர். எனவே, பேசி விஷய விளக்கம் தரவேண்டிய அவையில் வாய் மூடிப் பதுமைபோல் அவர் இருந்துவருகின்ற காரணத்தினுல், அவரை ஊமை எனக் குறிப்பிடுவதில் தவறு இருக்க நியாயம் இல்லை. சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஆற்றவேண்டிய கடமையையும், தமக்குள்ள கடமையுடன் இணைத்து ஆற்றிவருகின்ற காரணத்தினுலேயே நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்களை உளறுவாயன் எனக் குறிப்பிடுவது நூற்றுக்கு நூறும் பொருத்தமானதேயாகும்.

கனம் காமராசர் அமைச்சரவையின் தனிப் பெரும் உளறுவாயராக நிதி அமைச்சரைக்கொள்வதற்கு, அனைவரும்—ஏன் — அவரேகூட ஒப்புக்கொள்ளக்கூடிய மற்றெரு நியாயமான காரணமும் உண்டு. அதாவது, முரண்படப் பேசுவதிலும், எதையோ ஒன்றைக் கூற எண்ணி வேறு எது பற்றியோ கூறத் தொடங்கிப் புதிதாக வேறு ஒன்று பற்றி முடிப்பதில் நிதி அமைச்சருடன் போட்டியிடுவதற்கு, மீஞ்சூரார் அவர்களால்கூட முடியாது. அந்த அளவு உளறி வழிவதில் தனி சிறந்து விளங்கி வருபவர் நமது நிதி அமைச்சர்.

வழக்கமாக அவர் ஆற்றிவரும் உளறல் பணி, 'தேர்தல் வருகிறது' என்ற செய்தி தெரிவிக்கப்பட்ட உடன், முன்னிலும் கூடுதலாகத் தீவிரமடைந்துவிட்டது. நமது கழகம் நூற்றைம்பது தொகுதிகளில் போட்டியிடப் போகிறது என்ற அறிவிப்பைக் கேட்டவுடன், நிதி அமைச்சரின் வாயும் காதளவு அகண்டு விரிந்து, அவரின் இயல்பான உளறல் சண்டமாருதமாகச் சாடத் தொடங்கிவிட்டது.

அவர் போகிற இடங்கள் அனைத்திலும், பொதுவாக எதிர்க்கட்சிகளைக் குறித்தும்—குறிப்பாக நமது முன்னேற்றக் கழகத்தைக் குறித்தும் ஏதாவது முரண்பட உளறிவைக்கிறுர். அப்படி அவர் உளறிவரும் வரலாற்றில், கடலூர் கொக்கரிப்பு உளறலின் சிகரமாக அமைந்திருக்கிறது.

உத்தமர் காந்தியாரில் துவங்கி, ஐந்தாண்டுத் திட்டத்தைக்கூறி, இடையிடையில் தாங்கள் அமைச்சர்களாக இருந்து சாதித்துள்ள அரும் பெரும் சாதனைகளைச் சுட்டிக் காட்டி, அவர் விளக்கிக் காட்டிய அனைத்தையும் இணைத்துள்ள உயிர்நாடியாக இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரின் துதியைப் பாடி; தனது உளறல் அரசியல் புராணத்தை, நிதி அமைச்சர், செல்லுமிடமெல்லாம் செப்பிவருகிறுர். தமிழ்நாட்டு அரசியல் துறையில் அவர் அமைச்சராக மின்னத் தொடங்கிய நாள்தொட்டு, அவர் எதையும் மறந்ததாகவோ, புதிதாகக் கற்றதாகவோ அவருடைய அரசியல் உளறல்கள் காட்டுவனவாக அமைந்திருக்கவில்லை.

சுயராச்சியம் பெற்றதின் நோக்கம்;

மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு தேடித்தர ஒன்பதாண்டாக காங்கிரஸ் ஆட்சி நிறைவேற்றியுள்ள சாதனைகள்;

முதல் ஐந்தாண்டுத் திட்டப்; மேலும் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் போடவேண்டும்;

எதிர்க் கட்சிகள் பற்றிய பொது மதிப்பீடு;

வடநாடு தென்னுட்டின்மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்பதற்கு மறுப்பு;

இரண்டாவது திட்டத்தில் சென்னை பெற இருக்கிற முன்னேற்ற வாய்ப்புகள்;

தனித்து வாழ்வது பற்றிய அவருடைய ஆய்வுரை;

இப்படி, பலப் பல பொருள் பற்றி, நிதி அமைச்சர் கடலூரில் ஒரு 'அரசியல் அல்வா' உருவாக்கி இருக்கிறுர். அவை அனைத்தும் பற்றி தொடர்ந்து ஆராய்வோம்.

### உலகிலேயே உயரமுள்ள பக்ரா அணை !

சாந்திகார், டிச 1—

முதலில் திட்டமிடப்பட்டதைவிட பக்ரா அணை 80 அடி உயரம் அதிகமாக இருக்குமாம்! முதலில் திட்டமிடப்பட்டது 680 அடியாகும்.

760 அடியாக உயரும் பக்ரா அணை, உலகத்திலேயே மிகவும் உயரமான அணையாக இருக்குமாம்!

## பீகார் மாநிலக் காங்கிரசில் பிளவு

### காங்கிரஸ் உறுப்பினர்களுள் பலத்த கருத்து வேற்றுமை

அகில இந்தியக் காங்கிரஸ் குழு சார்பில் மொரார்ஜி தேசாய், பீகார் மாநிலத்தில் வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட காங்கிரஸ் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

பீகார் மாநில சட்டசபையில் 244 காங்கிரஸ் உறுப்பினர்கள் பதவியிலிருந்து வருகின்றனர். மொரார்ஜி தேசாய் தயாரித்துள்ள ஒரு பட்டியலின்படி, அவர்களில் 85 பேர்களுக்கு வரும் பொதுத் தேர்தலில் நிற்பதற்காகக் காங்கிரஸ் சீட்டு கிடைக்காதென அஞ்சப்படுகிறதாம்.

தேசாயின் பட்டியலை காங்கிரஸ் தலைமை ஏற்ருல், பீகார் காங்கிரசில் பிளவு ஏற்பட்டு, வரும் பொதுத் தேர்தலில் பல தோல்விகள் அடையவேண்டிவரும் என்று பீகார் மாநிலக் காங்கிரஸ் குழு வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளனவாம்.

மேலும், பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கென நியமிக்கப்படுகிறவர்களின் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட முடியாத அளவிற்கு பீகார் காங்கிரஸ் உறுப்பினர்களிடையே மிக மோசமான கருத்து வேற்றுமைகள் நிலவி வருவதாகவும் கூறப்படுகிறது.

## ரூ. 370 கோடி செலவில் மூன்று இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள்

### வடநாட்டில் தொழில் அபிவிருத்தி பற்றி சில விபரங்கள்

புதுடில்லி, டிச. 2—

வடஇந்தியாவில் புதிதாக நிர்மாணிக்கப்படும் மூன்று இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளில், ரூர்கேலா தொழிற்சாலை தான் மிக அதிகமான செலவில் அமைவதாகிறதாம்.

இந்தத் தொழிற்சாலைக்குச் செலவு ரூ. 160 கோடிவரை ஆகுமாம்.

பிரிட்டிஷ் நிறுவனத்தின் உதவியுடன் துர்காபூரில் துவங்கும் இத்தொழிற்சாலைக்கு ரூ 115 கோடி செலவாகும் என்றும், ரஷ்யாவின் உதவியுடன் துவங்கும் பிலாய் தொழிற்சாலைக்கு ரூ. 88 கோடி செலவாகும் என்றும் கூறப்படுகிறது

பிலாய், துர்காபூர் தொழிற்சாலைகளின் செலவும் பின்னர் உயரக்கூடும் என்றும், என்ருலும் ரூர்கேலா தொழிற்சாலையளவு போகாது என்றும் கூறப்படுகிறது.

#### பங்கு இல்லை

ரூர்கேலா திட்டத்தின் மூலதனச் செலவில் ஒரு பகுதியை ஜெர்மன் நிறுவனமான க்ரப்ஸ்—டெமாக் கம்பெனியார், ஏற்றுக்கொள்வதாயிருந்தது. இப்போது அந்த ஏற்பாடு கைவிடப்பட்டுவிட்டதாகவும், தொழிற்சாலை முழுக்க முழுக்க சர்க்கார் நிர்வாகத்திலிருக்கும் என்றும் இது மிக 'இலாபகரமானது' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

## பதவியிலிருந்து விலகுவதில்...

### கஷ்டமேதுமில்லையாம் !

அம்பாலா, டிச. 2—

'பதவியிலிருந்து விலகுவதற்குத் தனக்கொன்றும் கஷ்டமாயில்லை' என்று லால்பகதூர் சாஸ்திரி இங்கு கூறியிருக்கிறுராம்.

"மந்திரிகள், பதவியைப் பெரிதென எண்ணக்கூடாது; அதனைச் சாதாரணமானதாகவே கருதவேண்டும்"

என்று 1938-ல் காந்தியார் கூறியதை எடுத்துக் காட்டி, லால்பகதூர் சாஸ்திரி, தான் பதவியைச் சாதாரணமாகவே கருதியதாகவும், பதவியைப் பிரதானம் என்று அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை என்றும் கூறினுராம்!

"இந்த முடிவுக்கு வருமுன்னுல் "நான் எனது நெருங்கிய நண்பர்களைக்கூட — நேருவைக்கூடக் கலந்தாலோசிக்கவில்லை நானுகவே எனது சொந்த திருப்திக்காகவே பதவியிலிருந்து விலகுகிறேன்" என்றும் கூறினுராம்.

## நிலக்கரி உற்பத்திக்கு நிறுவனம்

### ரூ. 50 கோடி முதலுடன் துவங்குமாம்

இந்தியாவில் நிலக்கரி உற்பத்தியை ஒரு ஒழுங்கு முறையான திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்வதற்காக, தேசிய நிலக்கரி உற்பத்தி அபிவிருத்தி 'கார்ப்பரேஷன்' ஒன்று அமையும் என்று மத்திய சர்க்கார் தொழில் மந்திரி மனுபாய் ஷா, அகமதாபாத் கூட்டம் ஒன்றில் தெரிவித்திருக்கிறுர்.

இந்த நிறுவனம், ரூ. 50 கோடி மூலதனத்துடன் துவங்கும் என்றும், இப்போதுள்ள எல்லா சுரங்கங்களையும் இந்த நிறுவனம் இணைத்துக்கொள்ளும் என்றும் அவர் கூறியதாகத் தெரியவருகிறது.

இப்போது 380 இலட்சம் டன் நிலக்கரி உற்பத்தியாகிறது என்றும், இனி 480 லட்சம் டன் உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டமிடப்பட்டிருப்பதாயும் அவர் கூறியிருக்கிறுர்.

### குடிமக்களின் உரிமைகள் மீது கட்டுப்பாடு

#### மனிதன்—தேவதை ஆட்சி பற்றி அமெரிக்க நீதிபதி

சென்னை, டிச. 2—

"மனிதர்களை 'தேவதை'கள் ஆளுவதாய் இருந்தால் அப்பொழுது கட்டுப்பாடுகளுக்கு அவசியமில்லை; ஆனுல் மனிதனை மனிதன் ஆளுவதென்று வரும்பொழுது குடிமக்களின் தனிப்பட்ட உரிமைகள் மீது அரசாங்கத்தின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு வகைசெய்யவேண்டியது அவசியமாகிறது" என்று அமெரிக்கநீதிபதி ஹேஸ்டீ சென்னை உலக விவகார இந்தியக் குழுவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

### நெய்வேலி நிலக்கரிக் கார்ப்பொரேஷன்

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தை அமுல்நடத்துவதற்காக சென்னையில் அரசாங்கத்திற்குச் சொந்தமாக ஒரு கம்பெனி டிசம்பர் 6-ந் தேதி பணியாற்றத் துவங்குமாம்.

### டி. டி. டி. உற்பத்தித் தொழிற்சாலை

#### கேரளத்தில் ஏற்படுமாம் !

புதுடில்லி, டிச 3—

1958-ம் ஆண்டில் கேரளத்தில் ஒரு 'டி டி டி.' மருந்து உற்பத்தித் தொழிற்சாலை ஏற்படுத்துவதென இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

## ருமேனியச் சிறையில் நாகி !

### மற்றுமொரு 'புரட்சித் தலைவர்' கைது செய்யப்பட்டதாக தகவல்

முன்னுள் பிரதமரான நாகியும் அவரது ஆதரவாளர்களும் எங்கே என்ற கேள்வி, ஹங்கேரி மக்களிடத்திலிருந்து எழும்பியவண்ணம் முள்ளதாம்.

#### சிறையில்

நாகியும் அவரது ஆதரவாளர் 40 பேர்களும் ருமேனியாவில், புகாரெஸ்ட் நகருக்கு வடக்கே கார்பாதியன் மலைகளினூடே ஒரு மாரிக்கால விடுதியில் சிறை வைக்கப்பட்டிருப்பதாக யூகோ வானெலி தகவல் தந்திருக்கிறது.

#### மற்ருெருவர் கைது

'ஹங்கேரி தொழிலாளர் புரட்சிக் கவுன்சில்'ன் தலைவரான ஜோசப் ட்யூடாஸ் என்பவரையும் ரஷ்யப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர் என்று கூறப்பட்டிருக்கிறது.

## சூயஸ் எதிரொலி!

### மொம்பாசா துறைமுக அபிவிருத்தி

சூயஸ் கால்வாய் அடைபட்டுக்கிடப்பதால், ஆப்பிரிக்காவைச் சுற்றிவரும் பாதையிலுள்ள துறைமுகங்களை விஸ்தரிக்கும் அவசியம் ஏற்பட்டுவிட்டது. குறிப்பாக சப்பல்களுக்கு நிலக்கரி, தண்ணீர வசதிகளைச் செய்யவேண்டியதாயிற்று.

சூயஸ் நெருக்கடி ஏற்பட்டபோது, ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்லுமாறு எண்ணெய்க் கப்பல்களுக்கும் ஆசியாவிலிருந்து ஐரோப்பா செல்லும் கப்பல்களுக்கும் ஆணையிடப்பட்டது. அவை மொம்பாசா துறைமுகத்தில் கரியும் தண்ணீரும் நிரப்பிக்கொண்டு சென்றன; இவ்வசதிகள் தாராளமாகக் கிடைப்பதற்கு மொம்பாசா துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுவருகிறதாம்.

## பொதுத் தேர்தல்

### தேதிகள் நிர்ணயிக்கப்படவில்லை?

புதுடில்லி, டிச. 2—

வரும் பொதுத் தேர்தலுக்கான தேதிகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்று தேர்தல் கமிஷன் கூறியிருக்கிறது.

கேரளம், மைசூர் உள்ளிட்ட சுமார் 8 மாநிலங்கள், இன்னும் தேர்தல் நாள் பற்றித் தங்களின் இறுதிக் கருத்தை அறிவிக்கவில்லை என்றும், அவற்றின் கருத்தறிந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது.

## இந்து திருமணச் சட்டம்

### மாநிலங்கள் சபையில் திருத்தம்

புதுடில்லி, டிச. 1—

மூன்ருண்டுக் காலம் ஒருவர் மேக நோயால் பீடிக்கப்பட்டிருந்தால்தான், அக்காரணத்தின்மீது விவாக ரத்து கோரலாமென்று காலவரம்பை நிர்ணயித்து, இந்து திருமணச் சட்டத்தை மாநிலங்கள் சபை திருத்தியிருக்கிறது. அசல் சட்டத்தில், அதற்கான காலவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை; 'மேக நோயிருந்தால், அக்காரணத்தைக்கொண்டு விவாக ரத்து பெறலாம்' என்று மட்டும் இருக்கிறது.

## இமயத்தை ஆராயப் பிரிட்டிஷ் குழு

'எவரெஸ்ட்' சிகரத்திற்கு மேற்கே நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஜுகால் இமாலயப் பிரதேசத்தை ஆராய்ந்து படம் எழுதவும், தர்பி சியாடு, வெண்பனிச் சிகரம் என்ற இரு சிகரங்கள்மீது ஏறவும் யார்க்ஷயர் ராம்ப்ளிங் கிளப்பைச் சேர்ந்த அறுவர் இந்தியாவுக்கு வருவார்கள்.

அக்குழுவினர் ஜுகால் இமாலயப் பகுதியில் சுமார் பத்து வாரங்கள் தங்கக்கூடும்.

## ரூ. 20 கோடி செலவில்!

செயற்கை பெட்ரோல் உற்பத்தித் திட்டம்

புதுடில்லி, நவ. 30—

ரூ. 20 கோடி செலவில் செயற்கை பெட்ரோல் உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்றை திட்டக்குழு பரிசீலனை செய்து வருகிறதாம்.

## குறளுக்கு உரை எழுத

“திருக்குறளுக்கு உரை எழுதவ தென்றால் சில தகுதிகள் வேண்டும். உரையாசிரியர், தொல் காப்பியம் கற்றவராக இருக்க வேண்டும்; அவருக்குச் சங்க இலக்கியப் பயிற்சியும் இருக்க வேண்டும்; வழக்குச் சொற் களின் பொருளறியும் அனுபவ ஆற்றலும் வேண்டும். இவற்றை யெல்லாம்விட, உரையாசிரியர் தமது கருத்தை ஏற்றியுரைத்து அதனைத் திருவள்ளுவருடையது எனச் சாதிக்க முற்படக் கூடாது. இதுவே ‘உரையற' மாகும்,”

என்று, புதுக்கோட்டைத் திருக் குறள் கழகத்தின் சார்பில் 17—11—55 மாலை 5-30 மணியள வில் நகர் மண்டபத்தில் நடை பெற்றக் கூட்டத்தில் அழகப்பா கலைக் கல்லூரித் தமிழ் விரிவுரை யாளர் திரு. இரா. சாரங்கபாணி அவர்கள் பேசுகையில் குறிப்பிட் டார்.

புலவர் நடராசன் அனைவரை யும் வரவேற்றார்.

முதலில் மாணவர் தோழர் மீனாட்சிசுந்தரம் ‘திருவள்ளுவரும் திருக்குறளும்' என்ற பொருள் பற்றிப் பத்து நிமிடங்கள் சொற் பொழிவாற்றினார்.

பிறகு, திரு. இரா. சாரங்கபாணி ‘திருக்குறளும் உரையாசிரியர் களும்' என்ற பொருள் பற்றிச் சொற்பெருக்காற்றினார். கழகத் தலைவர் சுப்பிரமணியனார் சொற் பொழிவாளருக்கு மாலை அணி வித்தார்.

இறுதியில், திரு நடராசன் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடி வுற்றது. (ந. நி.)

### சென்னை மாநில முடிதிருத்தும் தொழிலாளர் சங்கம்

சென்னை, டிச 1—

கடந்த மாதம் 27-ந் தேதியன்று சென்னை புளியந்தோப்பிலுள்ள மேற்படி சங்க இல்லத்தில், அச் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் திரு. என். கன்னையா தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மேற்படி சங்கக் கட்டிடத்தில் ஒரு இலவச ஹோமியோபதி மருந்துச் சாலை திறப்பதென முடிவு செய்யப் பட்டுள்ளது.

### பிறப்பு

8—11—56-ல், விருத்தாசலம் தோழர் கே. கே. மாரியப்பன் துணைவியார் ஆண் மகவொன்றுக் குத் தாயானார். இது நினைவாக ‘நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது

* * *

தண்டரை தோழர் ஜே. எஸ். மணி அவர்களது துணைவியார் தோழியர் ஆனந்தம்மாள் 8—11—56-ல், ஓர் ஆண் மகவுக் குத் தாயானார்; இதன் நினைவாக, ‘நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன் பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

திருக்கழுக்குன்றம் தோழர் எஸ். நாகூர்பிச்சை அவர்களது துணைவி யார் தோழியர் லாயிலா அம்மை யார் ஓர் பெண் மகவுக்குத் தாயா னார்; இதன் நினைவாக, ‘நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன் பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

சிதம்பரம் திருவள்ளுவர் படிப் பகத் தோழர் ப. இராதாகிருட்டி ணன் அவர்களது துணைவியார் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக, ‘நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட் டது.

[நன்கொடைத் தொகைகள் யாவும் வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்]

# திருவொற்றியூர் கே. வி. கே. சாமி படிப்பகத் திறப்பு விழா

## மு. கருணாநிதி, சத்தியவாணிமுத்து கலந்துகொண்டனர்

1—12—56 மாலை 6½ மணியள வில் சென்னை திருவொற்றியூரை அடுத்த தாங்கல் பஸ் நிலையத்திற் கருகாமையில், தி. மு. கழகச் சார் பில், கே. வி. கே. சாமி நினைவு மன்றத் திறப்பு விழா நடை பெற்றது.

விழாக் கூட்டத்திற்கு தோழர் கே. எஸ். மணி முன்மொழிய, தோழர் எம். எல். எத்திராசன் வழிமொழிய தோழர் எஸ். ஐ வெங்கட்ராமன் தலைமை வகித் தார்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் இராதாமாணிக்கம் சிறிது நேரம் இயக்கப் பாடல்கள் பாடினார்.

தலைவர் துவக்கவுரைக்குப் பின், தோழர்கள் சக்கரபாணி, எஸ். மாசிலாமணி ஆகியோர் கே. வி. கே. சாமியின் அரும்பெரும் தொண்டுகளை விளக்கியும், வெள் ளைக்கார தாசர்கள் என்று கழகத் தவரை அமைச்சர்கள் ஏசிப்பேசி வருவதைக் கண்டித்தும், தேர்த லில் தி மு. கழகத்திற்கு மக்கள் ஆதரவு தருமாறு கேட்டுக்கொண் டும் சொற்பொழியாற்றினர்.

பின்னர் தோழியர் சத்திய வாணிமுத்து அவர்கள் தோழர் கே. வி. கே சாமி உருவப்படத் தைத் திறந்துவைத்து, இன்றைய நாட்டு நிலைகளை விளக்கியும், தேர் தலில் கழகத்திற்குப் பொதுமக்கள் ஆதரவு தரவேண்டிய அவசியத் தையும் விளக்கிப்பேசினர்.

தாங்கல் மகளிர் மன்றச் சார் பில் தோழியர் ஆலிஸ்-வேத மாணிக்கம் தோழியர் சத்திய வாணிமுத்து அவர்களுக்குக் கைத் தறி ஆடை அணிவித்தார்.

இறுதியாகத் தோழர் மு கருணா நிதி அவர்கள் கே. வி. கே. சாமி நினைவு மன்றப் பெயர்ப் பலகை யைத் திறந்துவைத்து அரியதோர் உரை நிகழ்த்தினர்.

தோழர் கருணாநிதி அவர்கட்கு சென்னை 4-வது வட்ட நே. வி கே. சாமி நினைவு மன்றச் சார்பில் கைத்தறி ஆடை அணிவிக்கப் பட்டது.

இடையில் மழை பெய்தும்கூட, கூடியிருந்த மக்கள் அனைவரும் ஆண்கள்—பெண்கள் உட்பட அமைதியாக இருந்து, கூட்டத் தைச் சிறப்பித்தனர்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந-நி.)

### தபால் தந்தி சம்மேளன இரண்டாவது ஆண்டுவிழா

சென்னை, நவ 30—

சென்னை நகர ஆர். எம். எஸ். ஊழியர்கள் சார்பில் கடந்த 24-ந் தேதியன்று சென்னை ‘சார்ட்டிங்' அலுவலகத்தில் தபால் தந்தி சம் மேளன இரண்டாவது ஆண்டு விழா நடைபெற்றது.

மேற்படி சம்மேளனம் ஆரம்பிக் கப்பட்டு இரண்டு ஆண்டுக் காலம் ஆகியும்கூட, தொழிலாள ரின் கோரிக்கைகள் பெருவாரி யாகக் கவனிக்கப்படாத நிலையி லேயே உள்ளன என்றும், தொழி லாளர்களின் நலன்களையெல்லாம் சர்க்கார் கவலையுடன் கவனித்து அவர்கள் திருப்தியுடன் வாழ வழி செய்தால்தான் நாடு முன்னேற்ற மடைய வழி உண்டு என்றும் அவ் விழாவிற்குத் தலைமை வகித்த திரு எஸ். நாகலிங்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

மற்றும் பலதோழர்களும் சொற் பொழிவாற்றினர். கூட்டத்தில் அரியலூர் இரயில் விபத்தில் உயி ரிழந்தோருக்கும் படுகாயமுற்றோ ருக்கும் அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோழர் ஜோசப் தம்பிராஜ் நன்றி கூறினர். (ந. நி)

* * *

### கடமையுணர்ச்சிக்குப்பாராட்டு

சென்ற வாரத்தில் நடைபெற்ற தூத்துக்குடி துரித வண்டி கோர விபத்தின்போது, பலத்தக் காயங் களைக்கூடப் பொருட்படுத்தாமல், அவ்வண்டியில் சென்ற ஆர். எம். எஸ். மெயில் கார்டு தோழர் சி. என். இலட்சுமணன், நான்காம் வகுப்பு ஊழியர் திரு. யூசுப் ஷரீப் ஆகிய இருவரும் மிகக் கஷ்டப் பட்டு, சிதறிப்போன தபால் பைக ளில் முக்கால் பகுதிக்குமதிகமாகச் சேகரித்துப் பாதுகாத்த அன்னா ரிருவரது கடமை உணர்ச்சி தன் னலமற்றத் தொண்டிற்கு, சென் னைப் பிரிவு ஆர். எம் எஸ். தொழி லாளர் சங்கத்தவர் (மெயில் கார்டு, நான்காம் வகுப்பு) பாராட்டுத் தெரிவித்திருக்கின்றனர்.

* * *

### அனுதாபம்

அண்மையில் ஏற்பட்ட தூத்துக் குடி துரித வண்டி விபத்திற்குப் பலியான எண்ணற்றோர் குடும்பத் தவருக்கும் படுகாயமுற்றோருக் கும், நெல்லை மாவட்ட வெண் ணெய், நெய் வியாபாரிகள் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

### பழனி இளைஞர் தி. மு. க. ஆண்டு விழா

25—11—56 மாலை 6 மணிக்கு பழனி தேரடி திடலில் தோழர் வெங்கடாசலம் தலைமையில் இளை ஞர் தி. மு. கழக ஆண்டு விழா நடைபெற்றது. தோழர் கோவை செழியன் தி. மு. கழகக் கொடி யேற்றிவைத்தும், தோழர் கே. எஸ் சந்தானம் தற்கால அரசியல் நிலைபற்றியும் சொற்பொழியாற்றி னர். தோழர் கோவை செழியன் கே வி. கே. சாமி நினைவுப் படிப் பகத்தைத் திறந்துவைத்தார்.

### பட்டுக்கோட்டை தி. மு. க. மாணவர் கிளை

28—11—56 மாலை 5 மணிக்கு, பட்டுக்கோட்டை கழக உயர்நிலைப் பள்ளி தி. மு. க. மாணவர் கிளைச் செயற்குழுக் கூட்டம் தோழர் நாடிமுத்து தலைமையில் நடைபெற் றது. தோழர்கள் கே. வி. கே. சாமி, சங்கரலிங்கனார் மறைவுக்கும் தூத்துக்குடி இரயில் விபத்தில் பலியானோருக்கும் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

## நெல்லை மாவட்ட தி.மு. கழகத் தோழர்களுக்கு:

“நமது மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் தேர்தல் நிதி திரட்டவேண்டிய பெரும் பொறுப்பை தலைமைக் கழ கம் நமக்குத் தந்திருக்கிறது. ஆங்காங்கே சிறப்புக் கூட் டங்கள் நடத்தியோ, பொதுக்கூட்டங்களில் உண் டியல் வசூலித்தோ, கழகத் தோழர்கள் தங்களது ஒரு நாள் வருமானத்தை ஒதுக் கியோ, நன்கொடை வசூ லித்தோ தேர்தல் நிதி திரட் டித் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கும்படி பணி வன்புடன் வேண்டுகின் றேன்.

“இவை தவிர்த்து, பல தோழர் கள் நாடகம் நடத்தி நிதி திரட்ட அனுமதி கோரியும், நாடகக் குழுவினரைக் கலந்து எழுதும்படியும் அவ் வப்போது கேட்டுக்கொண் டிருக்கிறார்கள். அவர்களது ஆவலைப் பூர்த்தி செய்யவும், தேர்தல் நிதி திரட்டுவதில் ஒத்துழைக்கவுமாகக்கோவில் பட்டியில் நாடகக் குழு ஒன்றை ஏற்பாடு செய்துள் ளேன். இக்குழுவினர்கள் (பின்னணிக் குழு உள்பட) மிக மிகக் குறைந்த செல வில், பிரயாணச் செலவை யும் தாங்களே ஏற்றுக் கொண்டு மாவட்டத்தின் பல பாகங்களுக்கும் நீங்கள் விரும்பினால் வந்து நாடகம் நடத்திவிட்டுச் செல்வார் கள். கழகத் தோழர்கள் இக்குழுவினரைப் பயன் படுத்திக் குறைந்த செலவில் நாடகங்கள் நடத்தி நிறைந்த அளவில் தேர்தல் நிதி திரட்டி அனுப்பிவைக்கு மாறு வேண்டுகின்றேன்.”

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் டபிள்யூ. டி. துரைசாமி அறிவிக் கிறார்.

நாடகக் குழுவினர் முகவரி :— ஜே எஸ். பாண்டியன் அண்டு ஜி. தேவராசன், நிர்வாகிகள், பாண்டி யனார் கலைக் குழு, மாதாங் கோவில் தெரு, கோவில்பட்டி.

****************************

தலைமைக் கழக அறிக்கை எண் 11/56 :

# தேர்தல் நிதி திரட்டும் வாரம்

[டிசம்பர் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள்வரை]

★

## கடமையைச் செய்ய கிளைக் கழகங்களுக்கு வேண்டுகோள்

நாடெங்கணும் அமைந்துள்ள தி. மு. கழகக் கிளைகள் அனைத்தும், 1956 டிசம்பர் 10-ஆம் நாளிலிருந்து 16-ஆம் நாள்வரையிலும் உள்ள ஒரு வார காலத்தைத் ‘தேர்தல் நிதி திரட்டும் வாரமாக'க் கருதித் தேர்தல் நிதி திரட் டும் பணிகளில் தீவிரமாக ஈடுபடும்படிக் கேட்டுக்கோள்கிறோம்.

கிளைக் கழகங்களைச் சேர்ந்த முக்கிய நிருவாகிகளும், பிற முக்கிய தோழர்களும் கழகத் தோழர்களிடத்திலும் கழக ஆதர வாளர்களிடத்திலும் பொதுமக்களிடத்திலும் நேரிடையாக அணுகித், தி. மு. கழகத்தின் தூய நோக்கத்தையும் தேர்தல் நிதியின் அவசியத்தையும் எடுத்துக்கூறி நன்கோடை வாங்கும் பணிகளில் சிறப்பாக ஈடுபட வேண்டுகிறோம்.

அந்த ஒரு வார காலத்தில் திரட்டிடும் நிதியை நேரிடை யாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கோள்கிறோம்.

★

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி :—

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

★

‘அறிவகம்'
சென்னை-13
28-11-56

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

************************************

ஆசிரியருக்குக் கடிதம் :

## அரிசி விலை ஏற்றத்திற்குக் காரணம்

### விநியோக முறையில் உள்ள கோளாறுதான்!

ஐயா,

சென்னை மாநிலத்தில் உணவுத் தானிய விலைகள்—குறிப்பாக அரிசி விலை நாளுக்குநாள் ஏறிக் கொண்டே போகின்றன. தஞ்சை மாவட்டக் குருவை சாகுபடி வந்தால் விலை இறங்குமென்று முதலில் கூறினார்கள். ஆனால் அதற்கு நேர்மாறாக அரிசி விலை ஏறிக்கொண்டே போகிறது. அர சாங்கம், போதிய அரிசி ‘ஸ்டாக்' இருப்பதாகத் தெரிவித்திருந்தும் அரிசி விலை நேர்மாறாக ஏறிக் கொண்டே போவதற்குக்காரணம், அரிசி விநியோக முறையிலுள்ள கோளாறும் தேவைக்குக் குறை வாக மார்க்கெட்டில் அரிசி இருப் பதும்தான்.

பம்பாய் மாநிலத்தில் 3,200 நியாயவிலைக் கடைகளுக்குமேல் திறந்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் அமார் 1,300 கடைகளும் சென்னை நகரத்தில் சுமார் 289 கடைகளும்தான் திறக்கப்பட்டிருக் கின்றன. இவற்றுள் ஒரு சில நியாயவிலைக் கடைக்காரர்கள் மக் களின் கஷ்டத்தை உபயோகப் படுத்தி பணம் திரட்டுவது வருந்தத் தக்கது.

எனவே அரிசி விலை ஏறுமல் கட்டுப்படுத்தவும், மக்களுக்குக் கஷ்டமில்லாமல் அரிசி கிடைக்க வும் அரசாங்கம் உடனடியாகக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தமிழ் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான நியாயவிலைக் கடைகளை உடனே திறக்கவேண் டும்; சென்னை நகரத்தில் வீதி தோறும் நியாயவிலைக் கடைகளைத் திறக்கவேண்டும்; இந்தியா—பர்மா கப்பல் போக்குவரத்தைத் துரிதப் படுத்திப்போதிய அரிசியை பர்மா விலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும்; துரிதமாகச் சென்னை யில் கிடங்குகள் கட்டிப் போதிய அரிசியை ‘ஸ்டாக்' செய்யவேண் டும்; உணவுத் தானியத்திற்கு முதலிடம் கொடுத்து, ‘இரயில்வே வாகன்' வசதிகளைப் பெருக்க வேண்டும்; துரிதப் போக்குவரத் திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்; போதிய புழுங்கல் அரிசியை நியாய விலைக் கடைகளில்போட ஏற்பாடு செய்யவேண்டும்; ஒவ்வொரு சில் லறை வியாபாரிக்கும் ஒரு நட வைக்கு 5 மூட்டைகளுக்கு மேற் படாமல் ‘கண்ட்ரோல்' அரிசியை விற்பனைக்குக் கொடுக்கவேண்டும்; மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் நிர்ப்பந்தித்துத் தமிழ் நாட்டிற்குத் தேவைப்படும் அரி சியை ஒவ்வொரு மாவட்டத் தலை நகரிலும் ‘ஸ்டாக்' செய்ய வேண்டும்.

அரசாங்கம் போதிய அரிசி ‘ஸ்டாக்' செய்து தங்குதடையில்லா மல் விநியோகம் செய்தால், ஓரளவு விலையைக் கட்டுப்படுத்த முடியும். நியாயவிலைக் கடைக்காரர்களும் அரிசி வியாபாரிகளும் இந்த நெருக் கடியான காலத்தில் நேர்மையாக நடந்து, பொதுமக்களின் நன் மதிப்பைப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பி. என். பி. கபூர்,
சில்லரை வியாபாரிகள் சங்கம்
சென்னை.

### சென்னை—வேளாளத் தேனாம்பேட்டை மக்கள் முற்போக்குமன்ற துவக்கம்

24-11-56 மாலை, சென்னை—வேளாளத் தேனாம்பேட்டை பீர் காரன் தெருவில், தோழர் எம். எஸ். பாலையம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மக்கள் முற்போக்கு மன்றம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந் தெடுக்கப்பட்டனர். செயலாளர் : எம். எஸ் பாலையம்; துணைச் செய லாளர்: எஸ். ஆர். தங்கவேலன்; பொருளாளர்: ஆர். எம். எல்லப் பன். செயற்குழு உறுப்பினர் களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# மு. கருணாநிதி போர்ப்பரணி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதற்கு சாந்தி பரிகாரமாக அமைச்சர் சாஸ்திரி இராஜினுமா செய்துவிட்டாராம். அப்படி விலகிய வடநாட்டு அமைச்சர் சாஸ்திரி கூடச் சொல்லியிருக்கிறார் —'இந்த நாட்டின் ஆட்சி நிர்வாகம் ஓட்டை உடைசலாக இருக்கிறது; ஒழுங்கீனங்களும் மோசடிகளும் ஏராளம்; நிர்வாக இயந்திரத்தில் பலத்தக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் மற்றெல்லா துறைகளிலும் இருப்பதைவிட இரயில்வே நிர்வாகம் மோசமாக இல்லை,' என்ற உண்மையையும் கூறிவிட்டுத்தான் சென்றிருக்கிறார்; அப்படிக் கூறுவது வடநாட்டு அமைச்சர் சாஸ்திரியார்—நாமல்ல!

## எச்சரிக்கையற்ற சர்க்காரில் வாழ்கிறோம் நாம்!

"இத்தகைய ஊழல்கள் மலிந்த ஒரு சர்க்காரிடம் நம்மை ஒப்படைத்துவிட்டு நாம் வாழ்கிறோம். ஒரு விபத்து ஏற்பட்டு அனுபவப்பட்டபின், அதுபோல் மேலும் ஒரு விபத்து ஏற்படக்கூடாதே என்ற எச்சரிக்கை இல்லாத ஒரு சர்க்காரின் ஆட்சியிலே நாம் வாழ்கிறோம்.

"தெலுங்குச் சீமை தனித்து வாழ வேண்டுமென்பதற்காகச் சாகும்வரை உண்ணாவிரதமிருந்தார் பொட்டி சீராமுலு. 'இதற்காக உண்ணாவிரதமிருந்து சாகத் தேவையில்லை; உங்கள் கோரிக்கைப்படியே செய்வோம்,' என்று கூறவில்லை நேரு; ஆனால் கடைசிவரை உண்ணாவிரதமிருந்து அவர் இறந்த பிறகு, அவருடைய பிணத்தின்மீது ஆந்திரச் சீமைக்கான அரசைத் துவக்கி வைத்தவரும் அதே நேருபெருமான்தான்.

"விருதுநகரிலே சங்கரலிங்கனுரும் காங்கிரசாரின் நிர்வாக ஊழல்களைச் சுட்டிக்காட்டி, இந்த நாட்டிற்குத் தமிழ் நாடு என்று பெயரிடுமாறு கோரி உண்ணாவிரதமிருந்தார். அதுபற்றிக் கொஞ்சங்கூடக் கவலை எடுத்துக்கொள்ளவில்லை இந்த சர்க்கார். சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த பொட்டி சீராமுலு தமது உயிரைத் தத்தம் செய்த பிறகும்கூட இந்த சர்க்கார், சங்கரலிங்கனுரின் உறுதி பற்றிய நினைவு இல்லாமல் இருந்துவிட்டது. இப்படி சர்க்கார் எச்சரிக்கையாயிருக்கவேண்டிய இடங்களில் எச்சரிக்கையாக இல்லாமல் போனதால் எத்தனையோ பேர் உயிரிழக்க நேரிட்டுவிட்டது.

## 'உழைப்பும் இரத்தமும் வெள்ளிப் பணங்கள்'!

"இந்த நாட்டில் கிடைக்கும் சுங்க வரி, மரண வரி, வருமான வரி, இரயில்வே வரி இவையெல்லாம் டில்லி சர்க்காரின் இரும்புப் பெட்டியை நிரப்பும் வெள்ளிப் பணமாகப் போய்ச் சேருகின்றன. திராவிட மக்களாகிய நமது உழைப்பும் நமது இரத்தமும், நமது வியர்வையும் வெள்ளிப் பணங்களாகச் சென்று வடநாட்டு இரும்புப் பெட்டியை நிரப்புகின்றன.

## 'காவடி எடுத்தது காற்றாய்ப் பறந்தது'

'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 6,000 கோடி செலவிடுவதென முடிவு செய்தார்கள்; இந்த 6,000 கோடி ரூபாய் இந்த நாட்டில் வாழும் 35 கோடி மக்களுக்கு—அவர்களுடைய நலன்களுக்கு தென்னகத்தில் வாழும் 9 கோடி மக்களுக்கு விகிதப்படி பார்த்தால் 4-ல் ஒரு பாகமாவது—அதாவது ரூ. 1,500 கோடி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி ஒதுக்கப்பட்டதா?

"சென்னை மாநிலத்திற்கு ரூ 400 கோடிக்குத் திட்டம் வேண்டும்—என்று, வழக்கம்போல் காமராசரும் சுப்பிரமணியமும் காவடி எடுத்தார்கள்; 'அதெல்லாம் முடியாது; 200 கோடிதான் தருவேன்' என்றார் நேரு. ஆனால், கடைசியில் கொடுத்ததோ ரூ 170 கோடி! இப்படி, கேட்டது ரூ. 400 கோடி—வாக்களித்தது ரூ. 200 கோடி—பெற்றுக்கொண்டது ரூ. 170 கோடி; அந்தப் 'பரப்பிரம்மங்கள்' தான் அண்ணாவைப் பார்த்து, '2,000 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டித் தர முடியுமா? என்று கேட்கிறார்கள்! அதுவும், அண்ணா திட்டம் தீட்டித் தந்து அதை ஒரு வெளிநாட்டு நிபுணன் ஏற்றுக்கொண்டால் தங்கள் பதவியைத் துறந்து விடுவதாகக் கூறுகிறார்கள்!

"இவர்களுக்கு இருக்கவேண்டியது அண்ணா அவர்களுடைய திறமையை உரைத்துப் பார்ப்பதா—நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்பதா? இவர்கள், 'அண்ணா திட்டம் தீட்டித் தரட்டும்; அதை வெள்ளைக்கார நிபுணன் ஏற்றுக்கொள்ளட்டும்; அதை நேருவிடம் கொடுக்கிறோம்; நேரு ஏற்றுக்கொள்ளாவிட்டால் தன்மானத்தோடும் ரோஷத்தோடும் பதவியை விட்டு விலகுகிறோம்' என்று சொல்லவேண்டும். ஆனால் அப்படிச் சொல்லமாட்டார்கள்; ஏனென்றால், அப்படிச் செய்தால் தங்களுடைய பதவிகளைத் துறக்கச் செய்துவிடுவார் நேரு என்று அவர்களுக்குத் தெரியும்.

## 'செல்வத்தைச் சீரழித்துத் தொழும்பர்களாகின்றனர்'!

"நம்முடைய வரிப் பணமும் உழைப்பும் வியர்வையும் வடநாடு செல்கிறதே—அவன் வாழ்கிறானே—நாம் தாழ்வுறுகிறோமே—என்ற காரணத்தைக் காட்டித்தான் திராவிட நாடு கேட்கிறோம் நாம்.

"கெட்ட புத்திசாலி, நல்ல ஏமாளி கதையைப்போல, நமது சர்க்கார், ஏமாந்த சோணகிரிகளாக நம் செல்வத்தை வடநாட்டினருக்குக் கொட்டிக் கொடுத்துவிட்டு அவர்களுக்கு அடிமைகளாக—தொழும்பர்களாக இருக்கின்றனர்.

## 'சன்னி பிறந்தது—உளறத் துவங்கினர்'!

"திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நிற்கிறது என்றதும், இந்தக் காங்கிரசாருக்குக் கடுங்கோபம் பிறப்பானேன்? கம்யூனிஸ்டுகளைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை; திராவிடக் கழகத்தார் அவர்களுக்கு மிக மிக நல்லவர்கள்—தேர்தலில் போட்டியிட மாட்டார்கள்—போட்டியிட்டாலும் வெற்றி பெறமாட்டார்கள் என்று 'பச்சை'யாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால் இதுவரை திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டில் எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றிப்பேசியபோதெல்லாம் சும்மாயிருந்த இவர்களுக்கு, தேர்தலில் ஈடுபடுகிறோம் என்றதும் கோபம் பிறப்பானேன்? இதுவரையிலும் அவர்களைத் தட்டிக்கேட்க ஆள் இல்லாமல் இருந்தது; இப்போது, 'நம்மை தட்டிக்கேட்க ஆள் வந்துவிட்டார்களே—என்ன செய்வது?' என்ற சுரம் முற்றி, அந்த சுரத்தின் விளைவாகக் கடும் சன்னி பிறந்துவிட்டது. எனவேதான் அவர்கள் போகுமிடமெல்லாம் நம்மைப்பற்றி மட்டரகமான முறையில் நாகல் நடையில் பேசித்திரிகிறார்கள்.

## 'பொறுப்பு என்ன என்பதை அறிவோம்'

"சட்டசபை என்றால் என்ன? அதன் பொறுப்பு எப்படிப்பட்டது? அங்கு எப்படி இருக்க வேண்டும்?—என்பதை அறிந்தவர்கள்தான் நாங்களும்.

## 'பதவி ஆசையல்ல—இலட்சியமே குறிக்கோள்'

"தேர்தலில் போட்டியிடுவதால், நாட்டு மக்களிடையே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கும் செல்வாக்கை எடுத்துக்காட்டுவோமே தவிர, பதவி ஆசையல்ல எங்களுக்கு! எங்களுக்குப் பதவி ஆசை இருந்திருந்தால் இதற்கு முன் எத்தனையோ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன — இதற்குள் எத்தனையோ பேர் மந்திரிகளாகியிருப்போம்.

"ஆனால் ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காகப் பாடுபடும் திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் ஈடுபடுவதையும் ஒரு படைக்கலமாகக் கருதுகிறது. எனவே, அத்தேர்தலில் தி. மு. கழகம் வெற்றி பெறப் பொதுமக்கள் தங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

## 'ஆதரவு தாரீர்!'

"நம்மிடையே இருந்து பிரிக்கப்பட்டவர்கள் பலர்; பிரிந்தவர்கள் பலர். பிரிக்கப்பட்டவர்களிலே ஒருவர்தான் நமது மறைந்த மாவீரன் சாமி. தி. மு கழகத்தின் முன்னேடும் பிள்ளைகளில் ஒருவரான அவர் அரும்பெரும் வீரர், தியாகி. அவர் சென்ற பாதை தியாகப் பாதை; அவர்கொண்ட இலட்சியம், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற உன்னத இலட்சியம். இலட்சிய வீரன் பெயரால் ஏற்படுத்தப்பட்ட இம்மன்றத்தின் பெயரால் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்—'வருகிற தேர்தலிலே தி. மு. கழகத்தின் கொள்கைகளுக்கு, இலட்சியங்களுக்கு ஆதரவு தாருங்கள்'—என்று"

---

## மணப்பாறை தி. மு. கழக மாணவர் கிளைப் பொதுக்கூட்டம்

மு. கருணாநிதி கலந்துகொள்வார்

6—12—56 மாலை 6 மணிக்கு, மணப்பாறை நேரு சதுக்கத்தில், தி. மு. கழக—மாணவர் கிளையின் சார்பில் தோழர் மா. இளங்கீரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் மு கருணாநிதி, அன்பில் தருமலிங்கம், இராவணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழர் இரா. பெருமான் இன்னிசை வழங்குவார்.

---

## எழுத்தாளர்கள் தேவை

அரசாங்கத்திடம் அங்கீகாரமோ, பண உதவியோ வாங்காமல் ஹாஸ்டல் வசதிகளுடன் எட்டாம் வகுப்பிற்குமேல் படித்தவர்களுக்காக நாங்கள் நடத்தப்போகும் (1) வியாபாரப் பயிற்சிக் கலாசாலை (2) பெண்கள் கலாசாலை (3) விவசாயப் பயிற்சிக் கலாசாலை ஆகியவைகளுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள் எழுதுவதற்குத் திறமையான எழுத்தாளர்கள் தேவை.

விவரங்களுக்கு எழுதுக:

தலைமையாசிரியர், பாலகுருகுல வித்யாலயம், விருதுநகர்

**-***** ***********-

## கழகக் கூட்டம்

★

மங்கலம்:

6—12—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: ம. ல. தஞ்சன்

பேசுவோர்:

என். வி. நடராசன்

ப. உ. சண்முகம்

வ. குமாரசாமி

ம. நெடுஞ்செழியன்

---

### சொற்பயிற்சிக் கூட்டம்

5-12-56 மாலை 6-30 மணிக்கு சென்னை—இராயபுரம், பனைமரத் தொட்டி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப் பணிமனையில், தோழர் சி. இளங்கோ தலைமையில், 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில் தோழர்கள் பேசுவர்.

* * *

5—12—56 மாலை 6 மணிக்கு சென்னை—சூளை சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத்தில் தோழர் இராசேந்திரன் தலைமையில், 'தி. மு. கழகமும் மற்றக் கட்சிகளும்' எனும் பொருள் குறித்துத் தோழர்கள் பலர் பேசுவர்.

---

## உயர் பதவிகள்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாகும்,' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சட்டசபையில் சர்க்கார் அறிவித்துள்ளபடி, மந்திரிகளின் ஆலோசகர்கள் மலாயர்களாகத்தான் இருக்கவேண்டும் என்பதே சர்க்காரின் உறுதியான கொள்கையாகும்.

---


THE SCHOOL OF ENGLISH LEARNING

# ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே — மண்ணடி — சென்னை - 1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

# ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

# இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

KNOWLEDGE IS POWER

சென்ற வருட நவம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட நவம்பரில் முடிவடைந்தன.

## புதிய வகுப்புகள்

டிச. 10-ந் தேதி ஆரம்பமாகின்றன

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி: 9-12-1956

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும் சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒருமணி நேரம் படித்தால் போதுமானது.

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

முக்கிய அறிவிப்பு: 16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்


திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெற்றது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.